Cr. M. 25/AC/18

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8073086

C

1. District : சேலம் மாவட்டம் | PS: ஊதகபிரிவு காவல்நிலையம் | Year: 2018 ஆண்டு | FIR No.: 15/AC/2018 மு.த.அ. எண் | Date: 9/8/2018 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 — Sections பிரிவுகள்: Sec: 7 of PC Act.

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: –

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: –

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) 03.08.2018 - மாலை கொளத்தூர் காவல் நிலைய வளாகத்தில்.

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 2) 07.08.2018 - மாலை சுமார் 06.10 மணியளவில் கொளத்தூர் காவல் நிலைய வளாகத்

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.08.2018 Time நேரம் 14.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.08.2018 Time நேரம் 14.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக [illegible] எழுத்துமூல புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கி.மீ மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி கொளத்தூர் காவல் நிலையம், சேலம் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. செந்தில் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. பொன்னையன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31/2018 | (d) Nationality : நாட்டினம் இந்தியர் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் [illegible] மேட்டூர் அனல் மின் நிலையம் | (g) Address : முகவரி 8/130 A, TCH, அம்மன் நகர், மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. ரவிச்சந்திரன், காவல் ஆய்வாளர், கொளத்தூர் காவல் நிலை

   2) திரு. [illegible], தலைமைக் காவலர், கொளத்தூர் காவல் நிலை சேலம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் S. சந்திரமௌலி பதவி DSP, V&AC நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. [signature] 9.8.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 9/8/18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
S. சந்திரமௌலி,
காவல் துணைக் கண்காணிப்பாளர்
Name: பெயர் [illegible]
Rank: நிலை ……………… No. எண் ………
[illegible]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
9/8/2018 – 20.00 hrs

சமர்ப்பிக்கப்படுகிறது

09.08.2018ம் தேதி மதியம் 14.00 மணிக்கு திரு.P.செந்தில் த/பெ.பொன்னப்பன், 8/130-A, ICH அம்மன் நகர், மேட்டூர் அணை –1 என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கனிணியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு

அனுப்புதல் P.செந்தில், S/o.பொன்னப்பன், 8/130-A, ICH அம்மன் நகர், மேட்டூர் அணை – 1 பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர் லஞ்ச ஒழிப்பு பிரிவு, சேலம். அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். நான் B.Com., வரை படித்துள்ளேன். நான் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் தினக்கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக TN 52 V 2846 என்ற பஜாஜ் டிஸ்கவர் பைக் வைத்துள்ளேன். நான் அதில்தான் தினமும் அனல்மின் நிலையத்திற்கு ஒப்பந்த கூலி தொழிலாளியாக வேலைக்கு சென்று வருகிறேன். எனக்கு சேவல் சண்டை பார்க்கும் ஆர்வம் உள்ளது. கடந்த 3.8.2018 ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஆடி 18 அன்று கொளத்தூர் பக்கமுள்ள சின்னதண்டா என்ற இடத்தில் சேவல் சண்டை நடப்பதாக கேள்விப்பட்டு நான் எனது பைக்கில் அன்று மதியம் சுமார் 1.00 மணியளவில் சின்னதண்டா மலைஅடிவாரம் சென்றேன். அங்கு கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். எனக்கு முன்பு ஒரு மகேந்திரா ஜைலோ ஜீப் அங்கு சென்று நின்றபின் அதிலிருந்து போலீசார் இறங்கினார்கள். அங்கிருந்தவர்கள் தங்கள் பைக்குகளை அப்படியே விட்டுவிட்டு சிதறி ஓடினார்கள். போலீசார் சிலரை சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள். நான் எனது வண்டியை நிறுத்தி திரும்பிச் செல்ல எத்தனித்தபோது என்னை அருகில் வரும்படி ஒரு போலீஸ்காரர் கூப்பிட நான் அவர்களிடம் சென்றேன். அப்போது அந்த போலீஸ்காரர் எனது வண்டியின் சாவியை எடுத்துக் கொண்டார். அவர் பெயர் திரு.சிவக்குமார் என்பதை பின்னர் தெரிந்து கொண்டேன். அங்கு சில பைக்குகளும் நின்று கொண்டிருந்தன. அப்போது அங்கு வந்தவர்கள் கொளத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.ரவீந்திரன், ஏட்டுக்கள் இளங்கோ, சிவக்குமார் மற்றும் போலீஸ் டிரைவர் செந்தில்குமார் என்றும் தெரிந்தது. பிறகு அங்கிருந்தவர்களை விசாரித்து அவர்களிடம் எதையோ பேசி பணங்களை வாங்கிக் கொண்டு அங்கேயே 5 நபர்களை அவர்களது பைக்குகளுடன் அனுப்பி விட்டார்கள். மற்றவர்கள் அங்கிருந்து ஓடி விட்டதால் என்னை கூட்டிக்கொண்டு ஒரு பிக்கப் வேனை வரவழைத்து அங்கிருந்த ஓடிப்போனவர்களின் மேலும் 7 இரு சக்கர வாகனங்களையும் அதே வண்டியில் ஏற்றிக் கொண்டார்கள். எனது பைக்கை ஏட்டு இளங்கோ எடுத்துக் கொண்டார். அனைவரும் அன்று மாலை சுமார் 3 ½ மணியளவில் காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி கொளத்தூர் காவல் நிலையம் வந்து சேர்ந்தோம். மேற்படி பிக்கப் வேனிலிருந்து பைக்குகளை நானும், அந்த பிக்கப்

வேனின் டிரைவரும் ஏட்டுகள் இளங்கோ மற்றும் சிவக்குமார் ஆகியோர் சொன்னதன்பேரில் இறக்கி காவல் நிலையத்தில் நிறுத்தினோம். எனது பைக்கை ஏட்டு இளங்கோ கொண்டு வந்து நிறுத்தினார். பிறகு நான் காவல் நிலையத்தில் காத்திருந்தேன். நான் எனது பைக்கை கொடுக்கச் சொல்லி ஏட்டு இளங்கோவிடம் கேட்டபோது அவர் என்னிடம் இன்ஸ்பெக்டர் ஆளுக்கு 6,000/– ரூபாய் வாங்கிக் கொண்டு வண்டிகளை கொடுக்கச் சொல்லிவிட்டார். அதனால் 5 வண்டிகளுக்கு ஆளுக்கு ரூ.6,000/– வாங்கிக் கொண்டு அனுப்பி விட்டோம். நீயும் ரூ.6,000/– கொடுத்தால் வண்டியை கொடுத்து விடுகிறோம் என்று சொன்னார்கள். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று சொன்னதற்கு பணம் ரெடி பண்ணிக் கொண்டு வந்தால்தான் வண்டியை தர முடியும் என்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு நான் மீண்டும் 6.8.2018 ம் தேதி திங்கட்கிழமை இரவு சுமார் 7 ¾ மணியளவில் கொளத்தூர் காவல் நிலையம் சென்றேன். இன்ஸ்பெக்டர் அப்போது காவல்நிலையத்தில் இல்லை. அப்போது அங்கிருந்த ஏட்டு சிவக்குமாரைப் பார்த்து நான் தப்பு ஏதும் செய்யவில்லை. வேடிக்கைதான் பார்க்கப் போனேன். எனது வண்டியை பிடிச்சுக்கிட்டு வந்துட்டீங்க வண்டியை கொடுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் இன்ஸ்பெக்டரைத்தான் நீ பார்க்கனும், அதனால நாளைக்கு வந்து பாரு என்று சொல்லிவிட்டார். நான் வேறு வழி தெரியாமல் வந்து விட்டேன். அடுத்த நாள் 7.8.2018 ஆம் தேதி மாலை சுமார் 6 மணிக்கு கொளத்தூர் காவல் நிலையம் சென்று இன்ஸ்பெக்டர் திரு.ரவீந்திரனை அவரது அறையில் சென்று எனது பைக் போலீஸ் ஸ்டேசனில் இருப்பதை ஞாபகப்படுத்தி அதைக் கொடுக்கும்படி கேட்டேன். அதற்கு அவர் என்ன கோழி சண்டை மேட்டரா என்று கேட்டு விட்டு என்னை வெளியில் காத்திருக்கும்படி சொன்னார். நானும் அவரது அறைக்கு வெளியில் வந்து நின்று கொண்டிருந்தேன். சுமார் 10 நிமிடங்கள் கழித்து அவர் அறையிலிருந்து வெளியே வந்தார். நான் அவரைப் பார்த்ததும் சார், என்னால் பைக் இல்லாமல் வேலைக்கு போகமுடியவில்லை வண்டியைப் பிடிச்சு 5 நாள் ஆகிவிட்டது, வண்டியை கொடுங்கள் சார் என்று கேட்டேன். அப்போது ஏட்டு இளங்கோ அங்கு வந்தார். அப்போது இன்ஸ்பெக்டர் ரவீந்திரன் 5 நாளாச்சா அப்போ உனக்கு எக்ஸ்ட்ரா பைன் போடனும் என்று சொல்லிக்கொண்டே இளங்கோவிடம் இதைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு என்னிடம் இளங்கோவைப் பாருங்கள், அவர் சொல்ற அமௌண்டை கொடுத்துவிட்டு வண்டியை எடுத்துக் கொண்டு போ என்று சொல்லிவிட்டு அவசரமாக தனது ஜீப்பில் போய் ஏறிக் கொண்டார். இளங்கோ என்னிடம் ஏற்கனவே இன்ஸ்பெக்டரிடம் பேசிவிட்டேன். எல்லோரிடமும் பத்தாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டுதான் வண்டிகளை கொடுக்கச் சொன்னார். உனக்கு குறைச்சு சொல்லச்சொன்னார். அதனால ஐந்தாயிரம் கொடுத்துட்டு வண்டியை எடுத்துகிட்டு போ, உடனே கொடுத்தால் உடனே போயிடலாம் என்று

சொன்னார். நான் பணம் கொண்டு வரல, ரெடி பண்ணிகிட்டு நாளைக்கு வந்திடறேன் சார் என்று சொன்னேன். சரி ரெடி பண்ணி எடுத்துட்டு வா என்று சொல்லி என்னை அனுப்பி விட்டார். அப்போது முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் மறைந்ததாக செய்தி வந்து கொண்டிருந்ததால் அனைவரும் பரபரப்பாக போய் கொண்டிருந்தார்கள். அதனால் நான் அன்றும், அடுத்தநாள் **8.8.2018** ஆம் தேதியும் நான் காவல் நிலையம் போகவில்லை. அதன்பிறகு யோசித்து பார்த்தபோது எனது பைக்கை பிடித்து வைத்துக் கொண்டு கேசும் போடாமல் என்னிடம் லஞ்சம் கேட்டது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் எனது பைக்கை திருப்பித்தர என்னிடம் ரூ.**5,000/-** லஞ்சம் கேட்ட கொளத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் ரவீந்திரன் மற்றும் ஏட்டு இளங்கோ ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 09.08.2018. (P.Senthil)

Sir, Received the above computer typed complaint today on 9-8-18 at 14.00 hrs and Registered a preliminary enquiry in PE.247/2018/POL/SL at 15.00 hrs today on 9-8-18 Sd xxxx 9.8.18. (S.CHANDRAMOULI), DSP, V&AC., Salem.

During verification, the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal gratification was confirmed through sources. Hence, I registered a case in Salem V&AC Cr.No.15/AC/2018 u/s 7 of PC Act 1988 at 19.00 hrs today on 9-8-18 and took up investigation. Sd xxxx 9.8.18 (S.CHANDRAMOULI), DSP, V&AC., Salem.

Original FIR along with original typed complaint of P.Senthil S/o.Ponnappan, 8/130-A, ICH Amman Nagar, Mettur Dam-1 is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

9/8/18

(S.CHANDRAMOULI),
Deputy Supdt. Of Police,
Vigilance & Anti-Corruption,
Salem-4.